சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – பள்ளிகளில் செயல்படும் 43,131 சத்துணவு மையங்களில் பயன்பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியத் தொகையினை உயர்த்தி நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (ப) எண்.144

நாள் 29.05.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, வைகாசி 15

படிக்க:–

1. அரசாணை (3ப) எண்.17, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 23.11.2023.
2. மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், நாள் 16.04.2025.
3. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க. எண்.555505/சஉதி–2(2)/2024, நாள் 17.04.2025.

......

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 2025–2026–ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளில் பிறவற்றினிடையே, பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்: –

**"சத்துணவு மையங்களில் பயன்பெறும் மாணவர்களுக்காக வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 61.61 கோடி ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்கப்படும்."**

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், துவக்கப்பள்ளி மாணவர்களுக்கான உணவூட்டுச் செலவினம் ரூ.5.45/– ஆகவும், உயர்துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி பயனாளிகளுக்கு ரூ.8.17/– ஆகவும் உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

3. சமூக நல ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்படி அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, தாளிதப் பொருட்கள் மற்றும் காய்கறிகளுக்கான சராசரி செலவினத்தையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டு வரும் பருப்பு, எண்ணெய், கொண்டைக்கடலை/ பச்சைப்பயிறு மற்றும் உப்பு ஆகிய பொருட்களுக்கு நடப்பாண்டிற்கான விலை

த.பி.பா

நிர்ணயப்பட்டியல் பிற பொருட்களான, தாளிதம் மற்றும் காய்கறிகளுக்கான தொகையினை வெளிச்சந்தை நிலவரப்படியும் மற்றும் முட்டைக்கான விலை உயர்த்தப்பட்டுள்ளதைக் (ரூ.5.80/–லிருந்து ரூ.6.08/–ஆக) கருத்தில் கொண்டும், தற்போதுள்ள உணவூட்டு மானியத் தொகையினை அரிசி நீங்கலாக, ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளபடி மாணவர் ஒருவருக்கு கீழ்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் என்று சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்:–

**தொடக்கப் பள்ளி பயனாளிகள் (1 முதல் 5–ம் வகுப்பு வரை)**

| வ. எண். | உணவுப் பொருட்கள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | பருப்பு (15 கி)<br>எண்ணெய் (3 கி)<br>கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப்பயிறு (20 கி)<br>(தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ. 1.41/–<br>(ரூ.0.69+ரூ.0.43+ ரூ.0.29) | ரூ. 1.65<br>(ரூ.0.98+ரூ.0.32+ரூ.0.35) |
| 2. | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள், காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) | ரூ.1.79/–<br>(ரூ.0.38+ரூ.1.33+ரூ.0.08) | ரூ. 2.01/–<br>(ரூ.0.45+ரூ.1.48+ரூ.0.08) |
| 3. | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ. 1.25/– | ரூ.1.25/– |
| 4. | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | ரூ.1.00/– | ரூ.1.28/– |
| | மொத்தம் | ரூ. 5.45/– | ரூ. 6.19/– |

**உயர்தொடக்கப் பள்ளி / உயர்நிலைப் பள்ளி பயனாளிகள் (6 முதல் 10–ம் வகுப்பு வரை)**

| வ. எண். | உணவுப் பொருள் | தற்பொழுதுள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | பருப்பு (15 கி)<br>எண்ணெய் (3 கி)<br>கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப்பயிறு (20 கி)<br>(தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ. 1.41/–<br>(ரூ.0.69+ரூ.0.43+ரூ.0.29) | ரூ. 1.65/–<br>(ரூ.0.98+ரூ.0.32+ரூ.0.35) |
| 2. | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள், காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) | ரூ.2.11 /–<br>(ரூ.0.38+ரூ.1.65+ரூ.0.08) | ரூ.2.71/–<br>(ரூ.0.45+ரூ.2.18+ரூ.0.08) |
| 3. | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ. 1.25/– | ரூ.1.25/– |
| 4. | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | ரூ3.40/– | ரூ.3.68/– |
| | மொத்தம் | ரூ. 8.17/– | ரூ. 9.29/– |

4. சத்துணவு பயனாளிகளுக்கு உணவூட்டு மானியத் தொகையினை, தொடக்கப் பள்ளி மாணாக்கர்களுக்கு ரூ.5.45/பயனாளி/நாள் என்பதை, ரூ.6.19/பயனாளி/நாள் ஆகவும், உயர்தொடக்கப் பள்ளி/உயர்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு ரூ.8.17/பயனாளி/நாள் என்பதை, ரூ.9.29/பயனாளி/நாள் ஆகவும், உயர்த்தி நிர்ணயம் செய்து உரிய ஆணை வழங்குமாறும், அவ்வாறு உணவூட்டுச் செலவினம் உயர்த்தி ஆணையிடப்பட்டால், அரசுக்கு ரூ.61,60,67,254/- (ஒன்றிய அரசு பங்கு (60%) ரூ.29,29,29,909 + மாநில அரசு பங்கு (40%) மற்றும் மாநில அரசின் கூடுதல் பங்கு ரூ.32,31,37,345) கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்தொடக்கப்/ உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் மாணவ/மாணவிகளுக்கான காய்கறிகள், எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்கான உணவூட்டுச் செலவினத்தை, மேலே பத்தி-3 அட்டவணையில் உள்ளவாறு உயர்த்தி நிர்ணயம் செய்தும், இதன் பொருட்டு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.61,60,67,254/-க்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடலாம் எனக் கருதி, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை, நிதித்துறையின் மின் அலுவலக எண்.9426834/நிதி(சந)/ 2025, நாள் 29.05.2025-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை-10.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I/II), சென்னை-18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).

இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித்(சந) துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/05/2025

பிரிவு அலுவலர்

29/05/25